நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

# சி.சி.எண். 74/2018

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா 5 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | வயது: | 76 |
| த/பெ.(அ)க.பெ | மாரியப்பன் | தொழில்: | கூலி |
| ஊர் : | பெருமாபட்டு | சமயம்: | |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசரணை:-

நான் பெருமாபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா. 4 வரையிலானவர்களை எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.3 ஆனந்தன் எனது உடன்பிறந்த சகோதரன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் திருப்பத்தூர் நீதிமன்றத்தில் எதிரி அரவிந்த்க்கும், என் தம்பி ஆனந்தனின் மகளுக்கும் விவாகரத்து வழங்கப்பட்டது. அப்போது திருப்பத்தூர் நீதிமன்ற வாளகத்திலேயே பாஸ்கரின் அண்ணன் மனைவி பெருமாபட்டிற்கு வாருங்கள் உங்களை நாங்கள் கவனித்து கொள்கிறோம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள். இங்கிருந்து நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். அப்போது மாலை 4.30 மணியளவில் பாஸ்கரின் அண்ணன் மகன் ஹரி எங்கள் வீட்டிற்கு வந்து தேங்காய் மட்டையால் என் தம்பி ஆனந்தை தோள்பட்டையில் அடித்தார். அப்போது அங்கு வந்த எதிரி பூங்காவனமும், அவருடைய மகளும், ஆனந்தன் மனைவியையும், அவருடைய மகளையும் கைகளால் உடம்பு முழுவதும் அடித்தார்கள். அவர்கள் வீட்டிற்குள் அடித்ததால் நான் கண்கூடாக பார்க்கவில்லை. அப்போது பாஸ்கர் நீளமான கோலை எடுத்து வந்து உங்களால் என்ன செய்ய முடியும் என்று கூறி கொண்டு என் தம்பி ஆனந்தனையும், அவருடைய மகனையும் வீட்டை விட்டு வெளியே தள்ளிவந்து தெருவில் வைத்து அடித்துவிட்டார். என் தம்பி ஆனந்தனை மேற்படி கொம்பால் பாஸ்கரன் தோள்பட்டையிலும், அவருடைய மகனை தலையிலும்

அடித்துவிட்டார். அப்போது ஊர்மக்கள் 10 பேர் மேற்படி சம்பவத்தில் ஓடி வநது தடுத்தார்கள். பின்னர் பாஸ்கரன் அவருடைய மகனை அவரே கல்லை எடுத்து அடித்துவிட்டார். பின்னர் காயம்பட்ட நபர்களை நான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு வீட்டிலேயே இருந்துவிட்டேன்.போலீஸார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

கோர்ட்டில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் கோர்டில் உள்ள மைதானத்தில் நடந்தது. பாஸ்கரன் அண்ணன் மனைவி பெயர் செல்வராணி. மேற்படி செல்வராணி மிரட்டியது குறித்து ஆனந்தன் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நாங்கள் நீதிமன்றத்திலிருந்து 4.45 மணியளவில் வீட்டிற்கு சென்று சேர்ந்தோம்.வீட்டினுள் நானும், என் தம்பி குடும்பத்தினர் நால்வர் என மொத்தம் 5 பேர் இருந்தோமா என்றால் ஆமாம். தண்ணீர் குடிக்கும்போதே ஹரி வந்துவிட்டார் அப்போது ஹரி அதே தேங்காய் மட்டையை எடுத்து வந்திருந்தாரா என்றால் அப்படித்தான் வந்தார். அவர் எல்லோரையும் தேங்காய் மட்டையால்தான் அடித்தார் என்றால் சரிதான். நான் மேற்படி சங்கதியை நான் போலீஸாரிடம் கூறினேனா என்றால் போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. நான் போலீஸாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.நான் தற்போது நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால் வந்துள்ளேன் என்றால் சரிதான்.வேறு எந்த விஷயமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாஸ்கரன், கல்லை எடுத்து அவருடைய மகன் அரவிந்தனை தான் அடித்தா என்றால் சரிதான். அப்போது வேறு யாரையும் பாஸ்கரோ, அல்லது எதிரிகளோ கல்லால் அடிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடக்கும போது 100 பேர் கூடிவிட்டார்கள். ஆனால் அருகே வந்து சம்பவத்தை பார்த்தவர்கள் ராஜா, சாந்தா, நானும் பார்த்தோம். சம்பவம் வீட்டினுள் நடந்ததால் நாங்கள் மூவர் தான் பார்த்தோம் என்றால் சரிதான். என் தம்பி மகனுக்கு காயம் ஏற்பட்டது வீட்டிற்கு வெளியே வைத்து அடிக்கும்போது தான் ஏற்பட்டது. அப்போது நான் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது வீட்டிற்கு வெளியே நிறையபேர்இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று தெரியாது என்றால் பாஸ்கரன், ஹரி இருவரும் தான் அடித்தார்கள் அதனால் எனக்கு தெரியும். ஆனந்தன் மற்றும் அவருடைய குடும்ப நபர்கள் அரவிந்தனை அடித்துவிட்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நாங்கள் எதிரிகள் மீது இவ்வழக்கை பொய்யான சங்திகள் அடிப்படையில் தாக்கல்

செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆனந்தன்என்னுடைய தம்பி என்பதால் நான் அவர் மகன் கொடுத்த வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

# சி.சி.எண். 74/2018

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா 6 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செண்பகம் | வயது: | 30 |
| த/பெ.(அ)க.பெ | ராமன் | தொழில்: | கூலி |
| ஊர் : | பெருமாபட்டு | சமயம்: | |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசரணை:-

நான் பெருமாபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அபிஷேக் என்னுடைய மைத்துனன். அ.சா.3 ஆனந்தன் எனது சின்ன மாமானார். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு 18.03.2018 அன்று என் மாமியார் லட்சுமிதேவி வீட்டிற்கு பார்ப்பதற்காக மதியம் 2.00 மணியளவில் வந்திருந்தேன். அப்போது எதிரிகளில், ஹரி, அரவிந்த், பூங்காவனம், பாஸ்கர், மகேஸ்வரி ஆகியோர் கல், கட்டை ஆகியவற்றை கொண்டு வந்திருந்தனர். அப்போது ஹரி கட்டையால் என்னுடைய மைத்துனர் அபிஷேக்கை தலையில் அடித்தார். அதில் அரவிந்த் கல்லால் என்னுடைய மைத்துனரை தலையில் அடித்தார். அப்போது சண்டையை தடுக்கச்சென்றேன். என்னையும் அடிக்கவந்தார்கள். அப்போது பூங்காவனம் மற்றும் மகேஸ்வரி ஆகியோர் எனது மாமியார் லட்சுமி, மாமானார் ஆனந்தையும் கையால் அடித்தார்கள். பின்னர் மேற்படி காயம்பட்ட அபிஷேக்கை மருத்துவமனையில் சேர்த்தோம். எனது மாமனாரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை வெளிநோயாளியாகவே பார்த்துக்கொண்டார். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எனது மாமியார் லட்சுமியின் தேவியின் வீடும், எனது வீடும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 500 அடி தூரம் இருக்கும். நான் மட்டும் தான் என் மாமியாரை பார்க்கச்சென்றேன். நான் சென்று பார்க்கும் போது என் மாமியார், மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது மதியம் 2.00 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் சென்ற பிறகு தான் சண்டை ஆரம்பமானது.அப்போது கோவிந்தன் அவருடைய வீட்டில் இருந்தார், அது ஆனந்தனின் பின்புறம் உள்ள வீடு. முதலில் ஹரி மட்டும் தேங்காய் மட்டை எடுத்து வந்தார் என்றால் தேங்காய் மட்டை மற்றும் கல் எடுத்து வந்தார். இரண்டு கைகளிலும், அதனை எடுத்து வந்தார்.ஹரி முதலில் அபிஷேக்கை கல்லில் அடித்துவிட்ட பிறகு தான் தேங்காய் மட்டையால் அடித்தார். அப்போது அபிஷேக்கிற்கு நிறைய ரத்தம் வந்துவிட்டதா என்றால் ஆமாம். அதை நாங்கள் தடுத்தோம் என்றால் சரிதான். ரத்தம் வந்தததால் மேற்படி அபிஷேக்கை என் மாமானார், மாமியார் அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். அப்போது எதிரி அரவிந்தனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. அப்போது என் பெரிய மாமனார் அங்கிருந்தார் என்றால் சரிதான். அப்போது எதிரி அரவிந்தனுக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக கோவிந்தன் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு அவர்களுடன் சென்றேன் என்றால் சரிதான். அப்போது அரவிந்தன் தலையில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரிதான். சம்பவம் வீட்டினுள் தான் நடந்தது என்றால் சரிதான், வெளியிலும் இழுத்துவந்தார்கள். அரவிந்த், என்னுடைய மாமியார், மாமனாரையும் வெளியே இழுத்து சென்றார். போலீஸார் மறுநாளே விசாரித்தார்கள் நான் மேற்படி கூறிய சங்தியை தான் போலீஸாரிடம் கூறியிருந்தேன். மேற்படி கல், தேங்காய் மட்டை நான் எடுத்து போலீஸாரிடம் கொடுக்கவில்லை. ஏன் மாமனார், மாமியார் வெளி நோயாளியாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். சம்பவத்தின் போது நானும், கோவிந்தனும் மேற்படி ஆனந்தன் குடும்ப நபர்கள் நால்வர் மட்டும் தான் அந்த இடத்தில் இருந்தோம் என்றால் சரிதான். யார் யாரை தாக்கினார் என்ற விவரம் வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். ஆனந்தன் மற்றும் அவருடைய குடும்ப நபர்கள் அரவிந்தனை அடித்துவிட்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நாங்கள் எதிரிகள் மீது இவ்வழக்கை

பொய்யான சங்திகள் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆனந்தன் என்னுடைய சின்னமாமனார் என்பதால் நான் அவர் மகன் கொடுத்த வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி.எண். 74/2018

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா 7 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரோஜா | வயது: | 33 |
| த/பெ.(அ)க.பெ | சிவகுமார் | தொழில்: | இல்லத்தரசி |
| ஊர் : | பெருமாபட்டு | சமயம்: | |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசரணை:-

நான் பெருமாபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 அபிஷேக் எனது சித்தப்பா மகன். அ.சா.2 சித்தப்பா, அ.சா.3 இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது நான் மிகவும் முடியாமல் படுத்துக்கொண்டிருந்ததால் யார் யாருக்கிடையே என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அதில் யார் யாரை அடித்துகொண்டார்கள் என்றும் எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)

என் தம்பி அபிஷேக்கை எதிரிகள் அடித்த சங்கதி எனக்கு தெரியாது அப்போது நான் உடல்நிலை சரியில்லாமல் மனதளவிலும் பாதிக்கப்பட்டிருந்தேன். நான் என்னுடைய போலீஸ் விசாரணையில் கடந்த 16.03.2018 அன்று எனது சித்தப்பா மகள் தங்கை ஜீவபூீக்கும் எதிரி அரவிந்தனுக்குமிடையே விவாகரத்து தீர்ப்பு திருப்பத்தூர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது என்றும், அன்றைய தினம் 3.30 மணியளவில் எனதுசித்தப்பா குடும்பத்தினர் வீட்டில் இருந்த பொருட்களை

எடுத்து போட்டு கொளுத்தி கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அங்கு வந்த எதிரிகள் எனது சித்தப்பா ஆனந்தன் வீட்டில் நுழைந்து அபிஷேக்கை பிடித்து வெளியே இழுத்து வந்து கெட்ட வார்த்தைகளால் திட்டி அதில் அரவிந்தனும், பூங்காவனமும் கைகளாலும், காலாலும் மார்பு, முதுகு மற்றும் உடல் மீது அடித்தும் எட்டி எட்டி உதைத்தும் தாக்கினார்கள் என்றும், அப்போது எதிரி பாஸ்கரன் கல்லால் அபிஷேக்கின் முதுகின் மீதும் தலையின் மீதும் குத்தினார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் என்னுடைய போலீஸ் விசாரணையில் நான் மேற்படி சம்பவத்தை பார்த்ததாகவும், அப்போது மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அரவிந்தன் கையில் வைத்திருந்த கட்டையால் அபிஷேக்கை அடித்தார் என்றும், பாஸ்கரன் கல்லால் தலை மீது அடித்தார் என்றும், அப்போது சண்டையை விலக்க சென்ற ஜீவஸ்ரீயை பாஸ்கரனும், அரவிந்தனும் உடம்பில் கைகளாலும், கால்களாலும் அடித்தும் உதைத்தார்கள் என்றும், அதை நான்தான் அபிஷேக்கின் ஜியோ போனில் ரெக்கார்டு செய்தேன் என்றும், கூறியிருந்தேன் என்றால் சரியல்ல. மேலும் மேற்படி சம்பவத்தில் ஹரியும், அரவிந்தனும் கையில் வைத்திருந்த விறகு கட்டையால் அபிஷேக்கின் உடைய இடது கால், தொடை மீது அடித்ததாகவும், அப்போது அங்கு வந்த எதிரி விவேக் அபிஷேக்கை கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றும், மேலும் பாஸ்கரனும், அரவிந்தனும் கையில் வைத்திருந்த விறகு கட்டையை காண்பித்து அபிஷேக்கை கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும், கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் விடியோ ரெக்கார்டிங் செய்து வைத்திருந்த செல்போனை போலீஸாரிடம் ஆஜர் செய்வதாக கூறியிருந்தேன் என்றால் இல்லை. நான் மேற்படி சங்கதிகளை போலீஸ் விசாரணையில் கூறிவிட்ட நேரடையாக சம்பவத்தை பார்த்திருந்தும் எனக்கே தெரிந்த காரணங்களுக்காக நான் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ.த.கு.வி:- இல்லை.